# நெடுநல்வாடையில் அறிவியல் கூறுகள்

**முனைவர் சு சாரதா**
**உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை**
**அன்னை வயலட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சென்னை**

43

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான நெடுநல்வாடை பாடல்களில் அறிவியல் கூறுகள் என்னும் தலைப்பில் இவ்வாய்வு அமைகின்றது.மக்கள் இல் அகத்தில்(இல்லகத்தில்) வாழ்ந்த வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் பாடல்களில் சங்க இலக்கிய அகநூல்கள் முன்னிலை வகுக்கும் எனலாம்.அந்த வகையில் சங்க இலக்கியங்களில் பயிர்த்தொழில், நெசவுத் தொழில், கட்டுமான வியல், மண்பாண்டத் தொழில், இரும்புத் தொழில்,பொன் தொழில், கடற்பயணம், தோல் பதனிடும் தொழில், கண்ணாடித் தொழில், கட்டில்,மெத்தை, நாழிகை வட்டில், தீக்கடைக்கோள் ,மகளிர் ஒப்பனை ( காலை, மாலை ,மழை நேர) ஒப்பனைகள், மது வகைகளும் அதன் தயாரிப்பு முறைகளும்,(சோமபானம்,சுராபானம்), கானல் நீர்,கருப்பூரம்,சிற்ப வேலைப்பாடுகள், ஓவியம் என சொல்லாத பாடாத தொழில்களே இல்லை.அவ்வகையில், நெடுநல்வாடையில் அறிவியல் கூறுகள் பற்றிக் காண்போம்.

**திறவுச்சொற்கள் :** நெடுநல்வாடை, தீக்கடைக்கோள், நாழிகை வட்டில், மும்மாரி, ஓவியங்கள்.

**தொடங்கவுரை**

உலக உயிர்கள் வாழ்வதற்கு நீர் மிக இன்றியமையாதது.மழை பெய்யும் முறை மிக முக்கியமானது.இதனை,

**வையம் பனிப்ப வலனேர்பு வளைஇ**
**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென(1-2)**

என்று உலகம் குளிரூட்டி வலதுபுறமாக எழுந்து வளைந்துத் தவறாது பொழியும் முகில்கள் புது மழையைப் பொழிந்தன.அதாவது, வலப்பக்கம் மழையும் காற்றும் வலஞ்சுழுமாயின் அவை மிகும்(பொ.வே. சோமசுந்தரனார் உரை) என்பர்.வாடைக்காற்று வீசுமாயின்(வலப்பக்கம் வீசுமாயின்) மழை பொழியும் என்னும் இவர்களின் அறிவியல் பார்வையை அறிய முடிகின்றது.

**கொடுங்கோல்**

இவ்வாறு தொடர்ந்து மழை பொழியும் வேளையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வெள்ளத்தை வெறுத்த கோவலர்கள் எப்படிப்பட்ட கோவலர்கள் என்றால்,

**ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்**
**ஏறுடை இனநிறை வேறு புலம் பரப்பி**
**புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல் (3-5)**

புதுமழை பொழிந்து வெள்ளம் மிகுதியானது. இதனை வெறுத்த கொடிய கோலையுடைய கோவலர்கள் (இடையர்கள்) ஏற்றையுடைய நிரைகளை ( பசு எருமை ஆடு )வேறு நிலங்களில்

மேயவிட்டு, நிலத்தை விட்டு நீங்கிய தனிமையால் கலங்கி இந்த கொடுங்கோள் கோவலர் என்பதற்கு அ முதலியவற்றை அலைந்து அச்சுறுத்தும் கோலாகலின் கொடுங்கோல் இனி வளைந்த கோள் எனினும் கோவலர் நிறைகளுக்கு உணவாகிய தலைகளை வளைத்து முறித்தல் பொருட்டு தலை வளைந்த கோள் (பொ.வே. சோமசுந்தரனார் உரை) என்கிறார்.

ஆடு மாடுகளை விரட்டுவதற்கு பயன்படும் கோலாகலாம் என்றும் இன்னொரு வகையால் நோக்கும்போது மரத்தில் உயரத்தில் எட்டாமல் இருக்கும் தலை இலைகளை வளைந்த கொக்கி போல் (பேச்சுத் தமிழில் தோதொரடு தொரட்டி என்பார்கள்) உள்ள இரும்பு கத்திஅ இதனை நீளமான மூங்கில் கொம்பின் உச்சியில் இக்கத்தியின் அடிப்பகுதி உள்ளீடு உள்ளதாகவும், கொம்பின் உச்சியில் செருகவும், கத்தியின் அமைப்பு வாகாக உயரத்தில் உள்ள தழைகளை வளைத்து உடைப்பதற்கு ஏதுவாக இருக்கும் கோல் அச்சுறுத்தும் கத்தியை உடையதால் கொடுங்கோல் என்று பாடியிருக்கலாம் புலவர். இவ்வாறு பயன்படுத்தி இருக்கும் அறிவியல் அறிவு காணமுடிகின்றது.

**கைக்கொள் கொள்ளியர்**
**நீடுதல் கண்ணே நீரலைக் கலாவ**
**மெய்க்கொள்பெரும்பனி நலியப் பலருடன்**
**கைக்குள் கொள்ளிய கவுள் புடையுள் நடுங்க(6-8)**

கைக்குள் கொன்னியர் என்று சொல்லப் புகுந்தவர் அதற்கு காரணம் கூறுகிறார் எதனால் எனில் அதன் ஏது ஏற்படுகின்றது என்பதை ஆறு முதல் எட்டு அடிகளில் நிறைவு அடையில் சொல்லி முடிக்கிறார் இப்படி சங்க கால மக்களின் அறிவியல் அறிவு மெய்சிலிர்க்க வைப்பதை காண முடிகிறது பாருங்கள்

வெள்ளத்தின் காரணமாக தான் இருந்த நிலத்தை விட்டு வேறு நிலத்திற்கு புலம்பெயர்னர் கோவலர்கள் இங்கு கூட தாம் பழகிய இடத்திலிருந்து சூழ்நிலை காரணமாக வேறு இடத்திற்கு புலம்பெயர்வது பிடிக்காமல் தன்னைத்தானே புலம்பும் அந்த மனிதனின் மன வெளிப்பாட்டினையும் படம் பிடித்து காட்டுகின்றது இதுவும் ஒரு மன அறிவியல் எனலாம்.

இவ்வாறு சென்ற கோவலர்கள் தங்கள் தலையில் அணிந்திருந்த இதழ்களை உடைய வெண்கந்தள் மலர்க் கன்னிகளில் இருந்து நீர் அலைத்ததால் உடம்பில் கொண்ட பெரும் குளிர்ச்சிக்கு வருந்தி பலரும் சேர்ந்து கையை நெருப்பிலே காய்த்தவர்கள் தங்கள் கையால் தங்களுடைய கன்னத்தைத் தட்டிப் பல்லைக் கொட்டி நடுங்க,

கையை நெருப்பிலே காய்த்து அதில் கொண்ட வெண்மையை கவுளிலே அடுத்ததலில் கைக்குள் கொள்ளியர் என்றார். கையிடத்தே கொண்ட நெருப்பினை உடையவராய் பற்பரை கொட்டி நடுங்கி நிற்ப என்பது. (நச்சுனாக்கினியர் உரை)

நெருப்பில் கையை காய்ச்சி மிதமிஞ்சிய குளிரில் நடுங்கும் போது கன்னம் தாடைகளில் வைத்தால் அச்சூடு போய் நடுங்கி ஒன்றோடொன்று உரசும் பற்களுக்கு சூடு கொடுக்கும் என்பதை உணர்ந்தவர்கள் நம் தமிழர்கள் என்பது பெருமிதமே.

**நேரம் ஊகித்தல்**

மாதம் மும்மாரி தவறாது பெய்யும் மழைக்காலம் ஆதலால் மாடங்கள் நிறைந்த பெரிய ஆறு போன்ற அகன்ற தெருக்களில் உள்ள வீடுகள். வீட்டில் வாழும் பெண்கள் இருள் சூழ்ந்து இருக்க இரவும் பகலும் ஒரே நிலையாய் காண்பவர்கள் பொழுது காண்கிறார்கள் எதைக் கொண்டு என்றால்





மாலையில் மலரும் பித்திப் பூ கண்டு அந்தி மாலை தொடங்கி விட்டது என்பதை அறிகிறார்கள் அதன் வாசம் கண்டு என்பதை

**வெள்ளி வள்ளி வீங்கு இறைப்பனைத் தோள்**
**மெத்தென் சாயல் முத்து உரல் முறுவல்**
**பூங்குழைக்கு அமர்ந்து ஏந்து எழில் மழைக்கண்**
**மடவர்கள் பிடகைப் பெய்த**
**செவ்வி அறும்பின் பயங்கால் பித்திகத்து**

அவ்விதல் அவிழ்ப்பதம் தமிழன் பொழுது அறிந்து

வெள்ளைச்சங்கு வளையல் அணிந்த இருகின முன் கையை உடைய மூங்கில் போன்ற தோளும் மென்மையான சாயலையும் முத்தைப் போன்ற வெண்மையான ஒளி வீசும் பற்களையும் சிறப்பான காதணி அணிந்தும் அதற்கு ஏற்றார் போன்ற உயர்ந்த அழகிய ஈர கண்களையும் மடப்பத்தையும் உடைய பெண்கள், பூந்தட்டிலே இட்டு வைத்த மலரும் பருவம் அமைந்த பச்சை நிற காம்பினை உடைய பிச்சி மலர்கள் அழகிய இதழ்கள் மலர்ந்து நறுமணம் தமிழ நேரத்தை அறிந்து இவ்வாறு பெண்கள் சங்கினால் செய்த வளையல் முகத்திற்கு ஏற்றார் போல் அணியும் காதணி மலர்கள் மலரும் நேரத்தை அறிந்து பொழுது மாற்றங்கள் அறிதல் என்னும் நாகரீக அறிவியல் அறிவு இருந்ததை காண முடிகின்றது.

**விளக்கு**

இவ்வாறு மலர் மலரும் பொழுதை வைத்து அந்தி மாலை வந்துவிட்டது இனி விளக்கேற்றி உள்ளுறை தெய்வம் வழிபடும் நேரம் என்பதை உணர்ந்து

**இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ**

என்று இரும்பினால் செய்த விளக்கின் எண்ணையைக் கொண்ட திரியை கொளுத்தி நெல்லும் மலரும் தூவி கையால் தொழுது வளப்பமான கடைவீதியில் மாலை நேரத்தில் இறைவழிபாட்டை மேற்கொள்ளும் பாங்கினையும் காணமுடிகிறது .

**நிறைவுரை**

இதுபோன்று இந்நூல் முழுவதிலும் அறிவியல் கூறுகள் நிரம்பி இருப்பதை காணலாம் பாண்டிய மன்னனுக்கு அரண்மனை கட்டுதல் எழுப்பும் பொழுதும் கட்டி முடித்த பின்பும் அறிவியலோடு சார்ந்த அரண்மனை கட்டமைப்பு பாண்டிமா தேவியின் இருக்கை வட்டில் அவள் அணிந்த ஆடை அதற்கு கஞ்சி ஊட்டி அதை நேர்த்தியாக அணியும் அறிவியல் வாசம் ஊட்டும் அறிவியல் அழகிய பல வண்ண ஓவியங்கள் பல வண்ண நிற கொடிகள் அனைத்தும் அதுவும் இல்லாமல் வேம்பு தலை யாத்த நூல்கள் என்ற வரிகளைக் கொண்டு வேம்பு அறிவியல் ரீதியாக நோய் எதிர்ப்பு சக்தியினை உடையது என்பதனை அறிந்தவர்கள் நம் முன்னோர்கள் என்பதனை நெடுநல் வாடை வழி நெடுக அறிய முடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. நெடுநல்வாடை- பொ.வே சோமசுந்தரனார் உரை

2. நெடுநல்வாடை- நச்சினார்க்கினியர் உரை

3. சங்க காலத் தொழில்நுட்பம்- பேராசிரியர் த.சாமிநாதன்